**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.77/2019 | Village | : | |
| Prosecution witness | : | PW-11 | Taluk | : | |
| Name | : | திரு. இளவரசன் | Occupation | : | |
| Father Name | : | திரு. | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 15.9.25**

A6 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் கீழவாசல் சாலைக்கார தெருவில் குடியிருக்கிறேன். நான் தற்போது ஒயரிங் வேலை பார்த்து வருகிறேன். இதற்கு முன்பு வாட்ச்மேன் வேலை பார்த்தேன். சின்னராஜ மகன் அப்பு என்கிற ஜகதீசன் இறந்த விபரத்தை போனில் சொல்ல கேள்விபட்டேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளில் ஒரு சிலர் தெரியும் பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையதுதான் **அ.த.சா.ஆ.11** ஆகும். அதை மருத்துவகல்லூரியில் பிரேத விசாரணை செய்தபோது கையெழுத்து போட்டேன்.

அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சம்மந்தபட்ட எதிரி லட்சுமணன், பாலமுருகன், ராஜேந்திரன் மகன் தினேஷ், குணசேகரன் மகன் தினேஷ், கரிகாலன், கோபிநாத், அஜித்குமார் ஆகியோர்களை போலிஸார் கைது செய்யும்போது உடன் இருந்தோம். லட்சுமணன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் ஜகதீசன் என்பவரை கொலை செய்தது தொடர்பான நான் சாட்சியாக இருந்தும் வழக்கு சம்மந்தபட்ட தடயங்களை கைபற்றுவதற்கு சாட்சயிாக இருந்தும் போலிஸார் தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு ஏதோ தனிபட்ட காரணத்திற்காக

போலிஸார் விசாரிக்கவில்லை என்றும் கையெழுத்து போடவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**